ஆர் யூ தேர், மேடம் சி.எம்.?

இதுவரையில் நான் வாசகர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துகள் சொன்னதில்லை. காரணம் வாழ்த்து சொன்னால், வாராவாரம் இந்த சமூகத்தின் மோசமான நிலைமைகளைப் பற்றி எழுதிவிட்டு, இதில் வாழும் எங்களுக்கு என்ன வாழ்த்து வேண்டிக் கிடக்கிறது என்று சிலர் கோபித்துக் கொள்வார்களோ என்ற தயக்கம்தான். இதையெல்லாம் மீறி வாழ, உங்களுக்கும் எனக்கும் மன வலிமை வேண்டும் என்று ஒருவரையொருவர் வாழ்த்திக் கொள்வோம்.

இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கும் சமயத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் முடிந்து போயிருக்கும். டிசம்பர் 31, ஜனவரி 1 ஆகிய இரு தினங்களில் டாஸ்மாக் விற்பனை எவ்வளவு, திருப்பதி கோயிலில் பக்தர்கள் எண்ணிக்கை எவ்வளவு, சாலை விபத்துகள் எத்தனை என்ற புள்ளிவிவரங்கள் வெளிவந்திருக்கலாம்.

டிசம்பர் 30 அன்று திடீரென்று வந்த உத்வேகத்தில் ஃபேஸ்புக் சமூக வலைத் தளத்தின் மூலம் ஒரு புரட்சி செய்ய முடியுமா என்று பார்த்தேன். எகிப்திலே செய்தார்கள், டெல்லியிலே செய்தார்கள் என்றெல்லாம் படிக்கிறோமே. சென்னையில் செய்தால் நடக்காதா என்ன என்று பார்க்கத் தோன்றியது.

"புத்தாண்டு கொண்டாட்டங்களையொட்டி தமிழகத்தில் உடனடியாக பாலியல் குற்றங்கள், சாலை விபத்துகளைக் கணிசமாகக் குறைக்க உதவும் விதத்தில் டிசம்பர் 31, ஜனவரி 1, 2 ஆகிய மூன்று தினங்களும் டாஸ்மாக் கடைகளை மூடும்படி முதலமைச்சரைக் கோருகிறேன். தாங்களும் கோர விரும்புவோர் கீழ்வரும் மின்னஞ்சலுக்குக் கோரிக்கையை அனுப்பலாம். cmcell@

tn.gov.in" என்று ஒரு வேண்டுகோளை பேஸ்புக் நேயர்களுக்கு எழுதினேன். நான் எதிர்பார்த்தமாதிரியெல்லாம் உடனே ஆயிரக் கணக்கானோர் அனுப்பிவிடவில்லை. என்னையும் சேர்த்து ஏழெட்டு பேர் அனுப்பியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அனுப்பினோர் அனுப்பாதோர் என்று பலர் பதில் கமெண்ட் போட்டார்கள்.

அதில் கிடைத்த முக்கியமான செய்தி — இந்த சி.எம் செல் மீது யாருக்கும் நம்பிக்கையில்லை என்பதுதான். சி.எம். செல்லுக்கு மின்னஞ்சல் அனுப்பினால் அதை யாரும் பார்க்கப் போவதில்லை என்றே பொதுமக்கள் நினைக்கிறார்கள். யாராவது ஒரு அதிகாரி பார்த்தாலும் அதற்கப்புறம் அவரும் எதுவும் செய்யப் போவதில்லை என்றே பொதுமக்கள் நம்புகிறார்கள்.

"ஆற்காடு சாலையில் இருக்கும் மெகா குப்பைத் தொட்டியை அகற்றச் சொல்லி இதுவரை ஐயாயிரம் பேர் சிஎம் செல்லுக்கு மின்னஞ்சல் அனுப்பி விட்டோம். சாலை நடுவே அமர்ந்து போராட்டம் கூட நடத்தி விட்டோம். ஒரு சாதாரண குப்பைக் கிடங்கு... பல ஆயிரம் கோடி பணம் வர்ற கடைகளையா மூடப் போறாங்க?" என்று கேட்கிறார் ஒருவர். ஐந்தாயிரம் பேர் மின்னஞ்சல் அனுப்பியும் சி எம் செல் கவனிக்கவில்லை என்பது அதிர்ச்சியாக இருக்கிறது.

"விபத்தாக சித்தரிக்கப்பட்ட ஒரு கொலை என்று அவரது குடும்பத்தாரால் இன்றும் நம்பப்படும் விஷயம் சி.எம்.செல்லுக்கு தான் முதலில் அனுப்பப்பட்டது. அதிகாரிகளால் அது கமிஷனர் அலுவலகத்துக்கு அனுப்பி பல நாட்கள் கடந்தும் ஒரு துரும்பும் அசையவில்லை. அந்த கேஸ் மூடப்பட்டது. ஒரு வருடம் முன்னால் அவர் மீண்டும் கமிஷனர் அலுவலகத்திற்கு சென்று கேட்டபோது, அது முடிந்து போன விஷயம் என புகாரையே எடுக்கவில்லை. நான் கமிஷனரிடம் நேரில் அழைத்துச் சென்று புகாரைப் பதிவு செய்தேன். ஒரு வருடம் தாண்டியும் இன்னமும் விசாரணை நிலைமையிலேயே உள்ளது" என்கிறார் ஒரு சக பத்திரிகையாளர்.

சி.எம்.செல் செய்யும் அதிகபட்ச வேலை அங்கு வரும் மனுவை உரிய துறைக்கு அனுப்புவதுதான் போலிருக்கிறது. அதையும் எப்போதாவது ரேண்டம் அடிப்படையில் செய்வார்கள் என்று நினைக்கிறேன். சூளைமேடு மாநகராட்சிப் பள்ளியில் புகைப் படக் கல்வி தி.மு.க ஆட்சியில் நிறுத்தப்பட்டதை மறுபடியும் தொடங்கும்படி கோரி ஒரு வருடம் முன்பு நான் சி.எம்.செல்லுக்கு அனுப்பிய மனுவை மாநகராட்சிக்கு அனுப்பிவிட்டார்கள். ஆம். நிறுத்திவிட்டோம் என்று ஒரு பதிலை மாநகராட்சி எனக்கு அனுப்பியது. அதுதான் எனக்கே தெரியுமே!

சென்னை மேயர் சைதை துரைசாமியின் பேஸ்புக் தளம் பற்றி ஆஹா ஓஹோ என்றார்கள். இப்பொது பார்த்தால் அந்தத் தளத்தில் எதுவும் உருப்படியாக நடப்பதாகவே தெரிய வில்லை. ஒரு கிறித்துவ பிரசாரகர் தன் செய்திகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார். மாநகராட்சி, மின்வாரியம், குடிநீர் வாரியம் எல்லாம் இணையம் மூலம் நம்மிடம் வசூல் செய்யும் தளங்களை சிறப்பாக நடத்துகின்றன. ஆனால் புகார் தெரிவிப்பதற்கானவை எதுவும் ஒழுங்காக இயங்குவதில்லை.

சரி, நேரில் போய் முதலமைச்சர் அலுவலகத்திலேயே மனு கொடுத்தால் கவனிப்பார்கள் என்று நம்பினால் அதுவும் மூட நம்பிக்கைதான். சாகித்ய அகாதமி விருது பெற்ற நான்கு தமிழ் எழுத்தாளர்கள் உள்ளிட்ட ஒரு குழு, அணு உலை பிரச்சினை தொடர்பாக முதல்வரை சந்திக்க விரும்புவதாகவும் நேரம் ஒதுக்கும்படியும் கோரி பிப்ரவரி 2012இல் நானே நேரில் சென்று முதல்வரின் செயலாளரிடம் கடிதம் கொடுத்தேன். "ரொம்ப வேலை பளு. நேரம் ஒதுக்குவதற்கில்லை" என்று கூட இன்று வரை அதற்கு பதில் கிடையாது. சமூகப் பிரச்சினையைப் பற்றி தன்னிடம் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் வந்து பத்து நிமிடம் பேச நேரம் ஒதுக்க முடியாதவர், தனக்கு டெல்லி கூட்டத்தில் போதிய நேரம் ஒதுக்காததைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறார்! என்ன கொடுமை இது!

சி.எம்.செல் வேஸ்ட். சி.எம். ஆபீசில் மனு கொடுத்ததும் வேஸ்ட். நேரில் தெருவில் இறங்கிப் போராடினால்தான் ஒரு வேளை கவனிப்பார்களா என்றால்...? இதோ இன்னொருவர் பேஸ்புக்கில் பகிர்ந்த அனுபவம்: "சில நாட்களுக்கு முன்பு மோகன் ப்ரூவரீஸ் என்ற மதுபான உற்பத்தி ஆலையில் மிக மோசமான தீ விபத்து ஏற்பட்டது. இருபதுக்கும் மேற்பட்ட தீ அணைக்கும் வண்டிகள் வந்து தீயை அணைத்தன. இந்த ஆலை ஆற்காடு சாலையில்தான் இருக்கின்றது. ஊருக்குள் ஒரு மதுபான உற்பத்தி ஆலையே இருக்கின்றது. இதை அகற்றச் சொல்லி பலமுறை மனுக்கள் கொடுத்து விட்டோம். சம்பவம் நடந்த அன்று இரவு பெண்கள் குழந்தைகள் எல்லாரும் வீதியில்தான் உறங்கினார்கள். ஆலையின் சிலிண்டர் இருக்கும் இடம் வெடித்து இருந்தால் வளசரவாக்கம், போரூர், மேற்கு கே.கே நகர் வரை மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும். மறுநாள் விடிந்ததும் முதல் வேலையாக ஆற்காடு சாலையில் அமர்ந்து பேருந்து மறியல் செய்தோம். எங்களை போலீஸ் வைத்து அடித்தார்கள். குழந்தைகள், பெண்களைக் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால் இன்னமும் ஒரு மதுபான ஆலை சென்னையின் மையப்பகுதிக்குள் இயங்கி வருகின்றது."

தெருவில் இறங்கிப் போராடினால் போலீசை வைத்து அடி உதை மிரட்டல்... சுதந்திர இந்தியாவின் 65 வருட வரலாற்றி லேயே இருந்திராத மாபெரும் அகிம்சைப் போராட்டத்தை நடத்தும் இடிந்தகரை மக்களை சொந்த ஊரிலேயே சிறை வைத்திருக்கிறது தமிழக அரசு. கூடங்குளத்துக்கு இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்து யார் போனாலும் தடுத்துத் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தது. தகவல் அறியும் உரிமை சட்டத் தின் கீழ் கூடங்குளம் செல்ல யாரிடமேனும் முன் அனுமதி பெற வேண்டுமா என்று மனு போட வேண்டிய நிலைமை. சட்டத்தின் கீழ் கேள்வி கேட்டதும் யாரிடமும் முன் அனுமதி பெறத் தேவையில்லை என்று பதில் தருகிறது போலீஸ். ஆனால் வருடம் முழுவதும் அமைதியாகப் போராட்டம் நடக்கும் இடத்தில் வருடம் முழுவதும் 144 தடை உத்தரவைப் போட்டு வருகிறது அரசு. அதை மீறித்தான் உலகப் புகழ் பெற்ற மனித உரிமைப் போராளி டாக்டர் விநாயக் சென் முதல் யாரானாலும் இடிந்தகரைக்குச் செல்ல முடியும். ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த நாள் முதல் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே போராடி வருகிறார்கள். இதுவரை அவரோ அவருடைய எந்த ஒரு அமைச்சரோ அந்த அமைதியான மக்களை சந்திக்கக்கூட முன்வரும் துணிச்சல் இல்லாமல் இருக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்த புதிதில் வாராவாரம் பத்திரிகையாளரை சந்திப்பேன் என்று சொல்லி, சொன்ன வாக்குறுதியை சில வாரங்களிலேயே மீறிவிட்ட முதலமைச்சரை, இப்போது யார் சந்திக்க முடியும், யாரெல்லாம் சந்திக்க முடியாது என்றே தெரிய வில்லை. நான் விரும்பினால் அமெரிக்க அதிபர் ஒபாமாவை எளிதில் சந்தித்துவிடலாம் போலிருக்கிறது. ஊழல், அராஜகம், குடும்ப சுயநலம், என்று எத்தனையோ கோளாறுகள் நிரம்பிய ஆட்சியை அளித்தவரென்றாலும் கலைஞர் கருணாநிதியை எந்தப் பிரஜை விரும்பினாலும் சந்திக்க முடியும் என்ற நிலை எப்போதும் இருந்திருக்கிறது. சந்திக்க முடியாவிட்டாலும் கூட ஒருவர் தன் குறையை, அவர் தீர்க்கிறாரோ இல்லையோ, அவருக்குத் தெரியப்படுத்தவாவது முடியும் என்ற நிலை இருந் திருக்கிறது.

இப்போது முதலமைச்சராக இருக்கும் ஜெயலலிதாவின் காதுக்கும் கண்ணுக்கும் ஒரு விஷயத்தை எடுத்துச் செல்ல என்ன வழி என்று அரசு ஊழியர்கள் மத்தியிலேயே தெரியாத நிலை. மின்வெட்டு முதல், சென்னை குப்பை நகரமாக இருப்பது வரை, திருப்பூர் சாயப்பட்டறை சிக்கல் முதல், வருடக்கணக்கில் நூலகங்களுக்கு புத்தகமே வாங்காதது வரை எதுவானாலும் முதலமைச்சர் கவனத்துக்குப் பிரச்சினையை எடுத்துச்

செல்வது எப்படி என்று ஒவ்வொரு துறையினரும் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

தன் குடிமக்களுடன் எந்தத் தகவல் தொடர்பும் இல்லாமல் இருக்கும் ஒருவர் எப்படி ஆட்சி நடத்த முடியும் ? என்ன நிர்வாகம் செய்ய முடியும்? அமைச்சர்கள் முதல் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வரை முதல்வரை அணுகி சங்கடமான செய்திகளைப் பேசத் தயங்கும் சூழலில் தன் மக்களின் நிலை பற்றி நிர்வாகத்தின் குறைகள் பற்றி யார் அவருக்குத் தகவல் சொல்வார்கள்? உளவுத் துறை மட்டும்தானா? இப்படிப்பட்ட முதலமைச்சர் நமக்கு எதற்கு என்பதுதான் என் கேள்வி. முதுகில் கொட்டும் குளவியை அடிப்பதற்காகக் கொள்ளிக்கட்டையை எடுத்து சொறிந்து கொண்டது போன்ற நிலையில் இருக்கிறோம்.

இப்படி தன்னைத்தானே ஒரு இரும்புக் கோட்டைக்குள் வைத்துப் பூட்டிக் கொண்டு வாழ்வது அவருக்கு சிக்கல் இல்லாமல் இருக்கலாம். அதற்கான நியாயமான காரணங்கள் கூட அவருக்கு இருக்கலாம். அவற்றையாவது நமக்கு சொல்லவேண்டும். தனி நபராக இருந்தால் அவர் தனிமைச் சிறையில் தன்னைத்தானே பூட்டிக் கொள்வதைப் பற்றி நமக்கு ஒரு பொருட்டுமில்லை. ஒரு முதலமைச்சர் இப்படி இருப்பது ஜனநாயகத்துக்குப் பொருத்தம் இல்லாதது. தெருப் போராட்டம் முதல் மின்னஞ்சல் வரை எதுவும் அவர் கவனத்துக்குச் செல்ல முடியாது என்றால், எப்படி ஆட்சி நடக்கிறது, யார் நடத்துகிறார்கள் என்ற கேள்விக்குப் பதில் தேவை.

கடந்த ஆண்டில் பல முறை முதல்வருக்கு பகிரங்கக் கடிதங் களையும் பல தமிழகப் பிரச்சினைகளைப் பற்றியும் இந்தப் பகுதியில் எழுதியிருக்கிறேன். அவையெல்லாம் முதல்வர் கண்ணுக்குப் போயிற்றா என்று தெரியாது. இந்தப் புத்தாண்டில் முதுகெலும்புள்ள எந்த அரசு அதிகாரியாவது இந்தக் கட்டுரையை முதலமைச்சருக்குக் காட்டி பதில் பெற்றுத் தந்தால் அதையே நமக்கான புத்தாண்டுப் பரிசாகக் கருதுவேன்.

கல்கி
5.1.2013

ஒரு முத்தமும் பல கேள்விகளும்

*‘ப**ம்பாய்’ படத்துக்குப் பின் மறுபடியும் மணிரத்னம், ராஜீவ் மேனன், ஏ.ஆர். ரஹ்மான் கூட்டணியுடன் எழுத ‘அறம்’ புகழ் எழுத்தாளர் ஜெயமோகன், நடிக்க கார்த்திக்கின் மகன், ராதாவின் மகள், மறுபடியும் அரவிந்த்சாமி, முதல்முறையாக மணிரத்னம் படத்தில் அர்ஜுன் என்று ரசிகர்களின் எதிர்பார்ப்பைத் தூண்டும் பல விளம்பர அம்சங்களுடன் வரவிருக்கும் ‘கடல்’ படத்தின் முதல் டிரெய்லர் பார்த்தேன்.*

பார்க்கச் சொன்னவர் திரையுலகில் பணி புரியும் ஒரு நண்பர்தான். படத்தில் நடிக்கும் ராதாவின் மகள் துளசிக்கு 15 வயதுதான் ஆகிறது. அந்தச் சிறுமியை இப்படி முத்தமிடும் காட்சியில் பயன்படுத்தியிருப்பது சரிதானா என்ற கேள்வியை அவர் ‘பேஸ்புக்’ சமூக இணைய தளத்தில் எழுப்பியதாகவும் யாருமே அதைக் கண்டுகொள்ளவில்லை என்றும் அந்த நண்பர் சொன்னார். அதனால் நானும் பார்த்துவிட்டு பேஸ்புக்கில் இவ்வாறு எழுதினேன்.

“நாம் எல்லாரும் சிந்திக்க சில கேள்விகள்: 15 வயது சிறுமியை லிப் கிஸ் அடிக்கும் காட்சியில் நடிக்க வைத்து படம் தயாரித்து வெளியிடுவது மணிரத்னத்துக்கு நல்ல வியாபாரமாக இருக்கலாம். ஆனால் அது ‘அறமா’குமா? படத்துக்கான கடல் படக் குழுவின் நிருபர் சந்திப்பைத் தொகுத்து வழங்கிய சுஹாசினி லட்சக்கணக்கில் பணம் திரட்டி மகளிர் நல அமைப்பு நடத்தி வருகிறாரே, அவரும் அந்த அமைப்பும் பெண்கள் பாதிக்கப்பட்ட பிறகுதான் உதவி செய்வது மெழுகுவத்தி கொளுத்துவதெல்லாம்

செய்வார்களா? பாதிப்பை ஏற்படுத்தும் அம்சங்களைப் பற்றி கவலைப்பட மாட்டார்களா? இன்றைய சினிமாக்களில் சிறுமியை வைத்து உருவாக்கிக் காட்டும் இத்தகைய காட்சிகள் விடலை மனங்களில் எப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி யாருக்கும் கவலையில்லையா? டெல்லி, ஸ்ரீவைகுண்ட நிகழ்வுகளுக்கெல்லாம் பொங்கி எழுந்த பேஸ்புக் வீரர்களில் சிலர் சினிமா துறை என்று வரும்போது மட்டும் பம்மிப் பதுங்கிக் காணாமற் போவது ஏன்?"

இந்தக் கருத்தை உடனடியாக 120 பேர் எடுத்து தத்தம் பேஸ்புக் சுவர்களில் பதிந்து பரப்பியிருக்கிறார்கள். இதற்கு முன் என் வேறு பதிவு எதுவும் இவ்வளவு பகிரப்பட்டதில்லை. என் இழையில் வந்து விவாதித்த பலரும் தெரிவித்த கருத்துகளில் முக்கியமானவற்றை மட்டும் பார்க்கலாம்.

இது காலம் காலமாக நம் சினிமாவில் நடப்பதுதானே என்பது ஒரு கருத்து. பதினைந்து வயதில் இதழ் முத்தம் இடக் கூடாதா என்பது இன்னொரு கருத்து. ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

உண்மைதான். கதாநாயகியாக நடிக்க 14 வயது சிறுமிகளை அழைத்து வருவது பல வருடங்களாக நடக்கிறது. இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா திரைப்பட நடிகையாக அறிமுகம் ஆனபோது அவர் வயது 15தான். மஞ்சுளா, ரேவதி, குஷ்பு போன்றோர் கதாநாயகிகளாக அறிமுகமாகும்போது வயது 16லிருந்து 18தான். சட்டப்படி மேஜர் வயது எனப்படும் 18க்கும் முன்பாகவே இந்த மைனர்கள் நடிக்கவைக்கப்படுவது அவர்கள் சம்மதத்தின் அடிப்படையிலேயே அல்ல. பெற்றோரின் விருப்பமும் சம்மதமும் அதிகாரமும்தான் செயல்படுகின்றன. 15 வயது துளசியை முகத்தில் காதலையும் காமத்தையும் விரக உணர்ச்சியையும் காட்டி நடிக்க வைப்பதில் முதல் பொறுப்பு அவளுடைய அம்மா ராதாவுடையதுதான்.

இப்படி வளர் இளம் பருவத்தில் இருக்கும் சிறுமிகளை சினிமாவில் எப்போதுமே காதல், காமக் காட்சிகளில்தான் நடிக்கவைத்து இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் காசு பண்ணி வந்திருக்கிறார்கள். எனவே இது ஒன்றும் மணிரத்னம் கண்டுபிடித்த புது விஷயம் அல்ல. அவரது முன்னோடிகள் செய்ததை அவர் இன்னும் சிறந்த தொழில்நுட்ப நேர்த்தியுடன் செய்யக் கற்றிருக்கலாம். ஆனால் தமிழ் சினிமாவில் வேறு எந்த படைப்பாளியை விடவும் அதிகமாகக் கொண்டாடப்படுபவர் அவர். அனைத்திந்திய அளவில் ஆராதிக்கப்படுபவர். அப்படிப் பட்டவர்கள்தான் மற்றவர்களுக்கு ரோல் மாடலாக இருக்க வேண்டிய பொறுப்புள்ளவர்கள். எனவே எப்படிப்பட்ட ரோல் மாடல் என்பது விமர்சிக்கப்படவேண்டும்.

அது மட்டுமல்ல, டெல்லியில் நடந்த பாலியல் வன்முறைக் கொடூரத்துக்குப் பிறகு நாடெங்கும் நாம் நம் பெண்களை எப்படி நடத்துகிறோம் என்ற கேள்வி பரவலாக தீவிரமாக இன்று விவாதிக்கப்படுகிறது. பெண்களைப் பற்றிய நம் பார்வையை உருவாக்கும் எல்லா சக்திகள் பற்றியும் பேசியாக வேண்டியிருக்கிறது. மதம், சாதி, குடும்பம், கல்வி, மீடியா, வணிகம் ஆகியவை எப்படி ஆணைப் பற்றியும் பெண்ணைப் பற்றியும் நம் கருத்துகளை உருவாக்கி வருகின்றன என்பதில் முன்னெப்போதையும் விட டெல்லி நிகழ்வுக்குப் பிறகு அதிக கவனம் செலுத்தும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதில் சினிமா நம் சமூகத்தின் விடலைச் சிறுவர்கள் மனங்களில் ஏற்படுத்தும் பாதிப்புகள் முக்கியமானவை. டெல்லி நிகழ்ச்சியில் குற்றவாளிகளில் ஒருவன் மைனர் என்பது கவனிக்கத்தக்கது. அண்மையில் தமிழ்நாட்டில் பள்ளிச் சிறுவர்கள் பள்ளி வளாகத்தில் மது குடித்ததைக் கண்டித்த ஆசிரியரை அடித்திருக்கிறார்கள். இன்னொரு நிகழ்ச்சியில் மது குடிக்க பணம் தேவை என்பதற்காகப் பள்ளிக்கூட மரமேசைகளை உடைத்து விறகாக்கி விற்றுக் குடித்திருக்கிறார்கள்.

கடந்த பத்தாண்டுகளில் தமிழ் சினிமாவில் பொறுக்கிப் பாத்திரங்களே ஹீரோவாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வாரம் வெளியான அலெக்ஸ் பாண்டியன் படத்தின் பெரும்பகுதி ஆபாச வசனங்களும் காட்சிகளுமாக இருக்கும் நிலையில் என் நண்பர் நடிகர் சிவகுமாருக்கு ஒரு மெசேஜ் அனுப்பும்படி ஆயிற்று. தன் மகன்களை ஆடம்பரமில்லாமல் ஒழுக்கமாக வளர்த்த தந்தை என்ற புகழுடையவர் அவர். "ஒழுக்கமாக வளர்த்த பிள்ளையை ஆபாசப் படத்தில் நடிக்க விட்டுவிட்டீர்களே என்று உங்களைப் பலரும் திட்டுகிறார்கள்" என்று செய்தி அனுப்பினேன். "எனக்கும் செய்தி வந்தது. இனி இந்த தவறு நிகழாமல் பார்த்துக் கொள் என்று சொல்லியுள்ளேன்" என்று உடனே பதில் அனுப்பியிருக்கிறார்.

சினிமா சமூகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது, குற்றம் செய்யவும், தவறு செய்யவும் தூண்டுகிறது என்ற கருத்தை ஒரு போதும் சினிமாகாரர்கள் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் அதன் பாதிப்பு சமூகத்தில் கடுமையாக இருக்கிறது என்பதை சமூகவியலாளர்களும் ஆசிரியர்களும் நடைமுறையில் நன்றாகவே அறிவார்கள். பெண்ணைப் பற்றி சமூகத்தில் ஏற்கனவே இருந்து வரும் மோசமான பார்வைகளை சினிமா, பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற மீடியாக்கள் கலைப்பதற்கு பதிலாகப் பலப்படுத்துகின்றன. ஆணுக்கு சேவை செய்ய பெண், பெண் விட்டுக் கொடுத்தால்தான் குடும்பம் உருப்படும், ஆணின் இச்சைக்கானவள் பெண் என்ற கருத்துகளைத் திரும்பத் திரும்ப

சொல்லிவருகிறது சினிமா. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற பழைய கருத்தை, பொறுக்கியானாலும் காதலன், ரவுடியானாலும் லவ்வர் என்று நவீனப்படுத்தியிருக்கிறது.

தொடர்ந்து தன்னைச் சுற்றிலும் பெண்பிம்பங்கள் உணர்ச் சியைத் தூண்டும் விதத்தில் மீடியாவால் தன் மீது வீசப்பட்டுக் கொண்டே இருக்கும் சூழலில் ஒரு பெண்ணைத் தொட்டுப் பார்ப்பதற்கான வாய்ப்புக்காக ஏங்கும் மனமாக வளர் இளம் பருவ சிறுவனின் மனம் தவிக்கிறது. ஐம்பதுகளில், அறுபதுகளில், எழுபதுகளில், எண்பதுகளில் இருந்ததை விடப் பல மடங்கு அதிகமாக மீடியாவின் பெண் மோகத் தூண்டுதல் சூழல் இன்றைய சிறுவருக்கு இருக்கிறது. வழிகாட்டுவோர் இல்லை. எதிர் பாலினத்துடன் ஆரோக்கியமாக உறவாடி ஒருவரையொருவர் புரிந்துகொள்ள உதவும் சூழல் குடும்பத்திலும் இல்லை, கல்விக் கூடத்திலும் இல்லை. எங்கும் இல்லை. இந்த நிலையில் இருக்கும் விடலைப் பருவத்தினரில் இன்னும் அதிகம் பேர் இன்னும் அதிக பாலியல் குற்றங்களை நோக்கித் தள்ளப்படாமல் இருப்பதே ஆச்சரியமானதுதான்.

இந்தப் பின்னணியில்தான் 15 வயது சிறுமியை, இதழ் முத்தக் காட்சியில் மணிரத்னம் பயன்படுத்துவதன் தவறை, ஆபத்தைப் பார்க்க வேண்டும். அதை அலசுவதற்கு முன்பு, பதினைந்து வயதில் ஒருவர் முத்தமிடக் கூடாதா என்ற கருத்தைப் பார்ப்போம். எந்த வயதிலும் முத்தமிடலாம், யாரும் முத்தமிடலாம். ஆனால் அந்த ஒவ்வொரு முத்தமும் வெவ்வேறானவை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எது வெறும் உடல் கவர்ச்சி, எது தற்காலிக ஆசை, எது காதல், எது பரஸ்பர அன்பு, எது பரஸ்பர மதிப்பு என்பதையெல்லாம் தன் உடலை இன்னொரு உடலுடன் பகிரும் போதெல்லாம் தெரிந்தே பகிரக் கற்காமல் பகிர்ந்தால் மனநல பாதிப்புதான் ஏற்படும்.

என்னுடன் மிகுந்த வாஞ்சையுடன் பழகிய பல இளைஞர்களின் திருமணங்களுக்குச் செல்லும்போது நான் மணமகனுக்கும் மணமகளுக்கும் நெற்றியில் முத்தமிட்டு வாழ்த்துகிறேன். எல்லா முத்தமும் ஒன்றென்று வாதிட்டு, நான் அவர்களை இதழில் முத்த மிட்டு வாழ்த்த முடியாது.

குழந்தையைக் கையில் எடுத்துக் கொஞ்சும்போது அதன் கன்னத்தில் முத்தமிடுவதுதான் சரி. உதட்டில் முத்தமிடுவது அல்ல. உதட்டு முத்தம் காமத்தின் வெளிப்பாடு. குழந்தைகளை ஒருவருக்கொருவர் முத்தமிடச் சொல்லிப் பழக்குவது சில பெற்றோரின் அசட்டுத்தனம். பாலியல் தொடுதல்களில், குட் டச், பேட் டச் என்பவை எப்படி முக்கியமோ அதே போலத்தான் முத்தங்களும்.

எனவே சினிமாவில் 15 வயது சிறுமி இதழ் முத்தத்தில் ஈடுபடு வதைப் பார்க்கும் 15 வயது சிறுவர்கள் மனதில் அது எப்படிப்பட்ட கிளர்ச்சிகளை ஏற்படுத்தும் என்பது பற்றிப் படைப்பாளிகளுக்குப் பொறுப்புணர்ச்சி வேண்டும். நம் சமூகத்தில் திரைப்படங்கள், யு, ஏ, யூ.ஏ என்றெல்லாம் வகைப்படுத்தப்பட்டாலும் தணிக்கை முறை சீராகவோ நேர்மையாகவோ இல்லை. எல்லா படங்களும் தொலைக்காட்சியில் யாரும் பார்க்கும்விதம் கிடைக்கும் சூழலே இருக்கிறது. மேலை நாடுகளில் இருக்கும் வரையறுக்கப்பட்ட சூழல் இதில் இங்கே நம்மிடம் இல்லை.

பள்ளிப் பருவத்திலிருந்து உடல் நலம் மன நலம் சார்ந்த பாலியல் கல்வியையும் மீடியாவைப் புரிந்துகொள்ளும் பயிற்சி யையும் அறிமுகம் செய்யவேண்டும் என்று என் போன்றோர் பல வருடங்களாக வலியுறுத்திவருகிறோம். ஆனால் அதற்கு கடும் எதிர்ப்பு காட்டுவோர் பாலியல் வக்கிரங்களை படைப்பாக்கு வோரைக் கண்டு கொள்வதே இல்லை.

பாலியல் வன்முறைகள், சீண்டல்கள் பற்றி நம் சமூகத்தில் முன்பு எப்போதும் இருந்ததை விடக் கூடுதல் அக்கறை இப்போது ஏற்பட்டுள்ள நிலையில், சினிமா துறையினரும் பத்திரிகைத் துறையினரும் தம்மைக் கடும் சுயவிமர்சனத்துக்கு உடபடுத்திக் கொள்ளவேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். அற உபதேசங்கள் எல்லாம் அரசியல்வாதிக்கும் அதிகாரிகளுக்கும் வாசகர்களுக்கும் மட்டுமென்று தனக்குத் தானே விலக்குக் கொடுத்துக் கொண்டு எழுத்தாளனும் இயக்குநரும் இனியும் இருக்க முடியாது. அக்கறை என்பது வெறுமே மெழுகுவத்தி ஏற்றுவது அல்ல. மீடியாவும் சினிமாவும் வெறுமே 'டைம் பாஸ்'தான் என்று சொல்லி இனியும் தப்பிக்க முடியாது.

காதல் என்றால் என்ன என்று நம் சிறுவர்களுக்கு சொல்லித் தருவதில் பெரும்பங்கு வகிப்பது நம் சினிமாதான். அது காட்டும் காதல் ரவுடித்தனத்தையும் விடலைத்தனத்தையும் பெண் சீண்டலையும் ஊக்குவிப்பதாகவே இருக்கிறது. இது மாறியாக வேண்டும். மாறவேண்டுமானால் நாம் அனைத்தையும் விமர் சித்து விவாதித்தாகவேண்டும். அதை மணிரத்னத்தின் விடலை முத்தத்திலிருந்தே தொடங்கலாம்.

(ஒரு பின்குறிப்பு: பின்னர் படம் வெளியானபோது அதில் அந்தக் காட்சி இல்லை. கதைக்கு அது எந்த விதத்திலும் அவசியமானதே அல்ல என்று இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.)

கல்கி
19.1.2013

திருப்பிக் கட்டமுடியுமா?

உலகின் பிரம்மாண்டமான இந்துக் கோவில் வளாகங்கள் எனப்படும் அங்கோர் வாட் சரித்திர பூமிக்கு சிங்கப்பூர் நண்பர் சரவணனுடன் சென்று மூன்று நாட்களை அங்கே கழித்தேன். பதினோராம் நூற்றாண்டில் தமிழ், சமஸ்கிருத, பல்லவ, திராவிட கலாச்சாரங்களுடன் தொடர்புடைய மன்னர்களால் கட்டப்பட்ட இந்தக் கோவில்களை விடப் பழமை வாய்ந்த கோவில்களான திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில், மயிலை கபாலி கோவில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில் போன்றவை இன்னும் வழிபாட்டு இடங்களாக தமிழகத்தில் உயிர்ப்புடன் இருக்கின்றன.

ஆனால் கம்போடியாவின் அங்கோர் வாட் கோவில்கள் சிவன், விஷ்ணு கோவில்களாகத் தொடங்கி பௌத்த கோவில்களாக மாறி சில நூறு வருடங்களிலேயே சிதிலமடைந்து, சிற்பங்கள் மேலை நாட்டினரால் கொள்ளையடிக்கப்பட்டு, பின் தொடர்ந்து நடந்த பல்வேறு யுத்தங்களால் கவனிப்பாரற்று மேலும் பாழாகின. சுமார் இருபது முப்பது வருடங்களாகத்தான் இந்தக் கோவில்கள் இந்தியா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளின் நிதி உதவியுடன் யுனெஸ்கோ வழிகாட்டுதலில் மறு சீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

அடர்ந்த மரச் சோலைகளின் நடுவே இருக்கும் அகழிகளும் கோட்டைச் சுவர்களுமாக இருக்கும் இந்தக் கோவில் இடிபாடு களில் கம்போடிய சமூகத்தின் ஒரு காலத்தைய வளமும், செழிப் பும், கலைத்திறனும் பளிச்சிடுவதைப் போலவே, கோவில்

வளாகத்திலும், வெளியே சியாம் ரீப் நகரின் ஒவ்வொரு சந்திலும் மூலையிலும் கடைத்தெருவிலும் கம்போடியாவின் இன்றைய கொடூரமான ஏழ்மை முகத்தில் அறைகிறது. ஆஸ்திரேலியா முதல் கனடா வரையிலான சுற்றுலாப் பயணிகள் இடிந்த இந்து/பௌத்த கோவில்களைக் காண வரவில்லையென்றால் இந்த நகரம் முழுக்க செத்துப் போய்விடும்.

உள்ளூரில் எதற்கும் கம்போடிய ரியாலை யாரும் விரும்புவ தில்லை. அமெரிக்க டாலர் மட்டுமே பெரிதும் புழங்குகிறது. ஒரு டாலருக்கு நான்காயிரம் ரியால்! கம்போடியாவில் எந்தப் பெரும் தொழில் உற்பத்தியும் இல்லை. ஓடும் எல்லா கார்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. நகரத்தில் பஸ் வசதியே கிடையாது. மொப்பெடுக்குப் பின்னால் டிராக்டர் டிரெய்லர் போல சீட் வைத்த இணைப்பைக் கட்டிக் கொண்டு டுக்டுக் என்ப்படும் ஆட்டோகள் மட்டுமே ஓடுகின்றன. 90 சத விகித மக்கள் விவசாயத்தை நம்பியே இருக்கிறார்கள். எல்லாரும் டூரிஸ்ட்டுகளை நம்பி இருக்கிறார்கள்.

கடும் வெயிலில் கோவில் இடிபாடுகளை பலப் கிலோமீட்டர் நடந்து நடந்து சுற்றிப் பார்த்தபோது அவை என்னைக் கவர்ந்ததை விட, அதிகமாக என் கவனத்தை ஈர்த்தது வேறொன்றுதான். கோவில் வளாகத்துக்குள் பல்வேறு கம்போடிய இசைக் கருவி களை உட்கார்ந்து இசைத்தபடி, டூரிஸ்ட்டுகளிடம் மௌனமாக பிச்சை கேட்டுக் கொண்டிருந்த குழு ஒன்றைப் பார்த்தேன். அன்றிரவு நகரத்துக்குள் டூரிஸ்ட்டுகள் அதிகம் புழங்கும் பப் ஸ்ட்ரீட், நைட் மார்க்கெட் பகுதியில் நடுத்தெருவில் இதே போன்ற இன்னொரு குழுவைப் பார்த்தேன்.

இந்த இசைக் குழுக்களில் இருப்போர் பலரும் கம்போடியாவில் சுமார் 30 வருடங்கள் அமெரிக்க, ரஷ்ய, சீன ஆயுத உதவியுடன் வெவ்வேறு இயக்கங்கள் நடத்திய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்கள். இவர்கள் எல்லாரையும் பாதித்தது யுத்தத்தின் ஒரே அம்சம்தான். பூமிக்கடியில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள். சண்டையிடும் எதிரெதிர் அணிகள் இன்னொரு அணி தம்மை நெருங்க விடாமல் தடுக்க மாறி மாறி நிலமெங்கும் கண்ணி வெடி களைப் புதைத்திருக்கின்றன. சண்டை முடிந்தாலும், கண்ணி வெடிகளை அகற்றும் வேலை முடியவில்லை.

எங்கெல்லாம் கண்ணி வெடி புதைக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிப்பது சுலபமல்ல. அரசாங்கத்தின் ராணுவங்கள் கண்ணி வெடியைப் புதைக்கும்போதே அதைப் பற்றிய வரைபடம் தயாரித்துக் கொள்ளவேண்டும். கெரில்லா அமைப்புகளும் வரைபடம் வைத்திருப்பதுண்டு. ஆனால் பெரும்பாலான சமயங்களில் இரு தரப்பினரின் பாசறைகளும்

தளவாடங்களும் அழிக்கப்படும்போது இந்த வரைபடங்களும் அழிந்துவிடும். ராணுவத்தின் வரைபடத்தின் பிரதி வேறு நகரில் தலைமையகத்தில் இருக்கும் வாய்ப்பு உண்டு. போராளி அமைப்புகள் அழியும்போது எல்லாத் தகவல்களும் சேர்ந்தே அழியும் வாய்ப்பே அதிகம்.

இந்தக் கண்ணி வெடிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று தெரியாமல் காலை வைத்து உறுப்புகளை இழந்து நடைப் பிணங்களாக வாழ்வோர் நிலை மிக பரிதாபகரமானது. கம்போடியாவில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இப்படி கை கால் இழந்தவர்கள் உள்ளனர். அவர்களில் சிலர்தான் பாட்டு பாடி டூரிஸ்ட்டுகளிடம் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். கண்ணி வெடி விபத்தில் பாதிக்கப்படுவோருக்கான் நியாயத்தை யாரிடமும் போய் கேட்கமுடியாது. போரில் பாலசந்திரன் போன்ற குழந்தைகளை சுட்டுக் கொன்றதற்காக இலங்கை ராணுவத்தைப் போர் குற்றவாளியாக கூண்டில் நிறுத்த வாய்ப் பாவது இருக்கிறது. ஆனால் கண்ணி வெடி விபத்தில் கை கால் இழந்த சிறுவர்களுக்கு நீங்கள்தான் பொறுப்பு என்று எந்த தரப்பையும் தனியே அடையாளம் காட்ட முடியாது. (இந்த வாசகத்தைத்தான் கண்ணி வெடி பாதிப்புக்குள்ளானோருக்கான இணைய தளம் ஒரு சிறுவன் படத்துடன் சொல்கிறது: இந்த சிறுவன் வேறு விதமாக இந்த நிலைக்கு ஆளாகியிருந்தால் அதற்கு யாரையாவது பொறுப்பாக்கமுடியும். ஆனால் கண்ணி வெடியில் பாதிக்கப்பட்டால், அதற்கு பொறுப்பு என்று யாரையும் நீதிக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி நியாயம் கேட்க இயலாது.)

கம்போடியாவில் கண்ணி வெடியில் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள்தான். சுமார் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் கண்ணி வெடியால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கே காட்டில் சுள்ளி பொறுக்கச் செல்பவர்களும், வியட்நாம் யுத்தத்தின்போதும் உள்ளூர் யுத்தத்தின்போதும் போடப்பட்ட குண்டுகளின் உலோகக் கவசங்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து விற்றுப் பிழைக்கச் செல்வோரும் கண்ணி வெடியாலும் இன்னும் வெடிக்காமல் இருக்கும் சில க்ளஸ்ட்டர் குண்டுகளாலும் உயிரையும் உறுப்புகளையும் இழக்கிறார்கள்.

பெருமளவில் கம்போடியாவில் கண்ணி வெடிகளும் குண்டு களும் வயல்களிலிருந்து நிலங்களிலிருந்து கடந்த பத்தாண்டுகளில் அகற்றப்பட்டாலும் இன்னும் சுமார் 60 லட்சம் கண்ணி வெடிகள் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள். கண்ணி வெடியை அகற்றுவது எளிதானதும் மலிவானதும் அல்ல. ஒரு கண்ணி வெடியைப் புதைக்க ஆகும் செலவு வெறும் மூன்று டாலர்தான். அகற்றுவதற்கு ஒரு வெடிக்கு சுமார் 1200 டாலர்

செலவு ஆகிறது. வருடந்தோறும் சுமார் மூன்று கோடி டாலர் கண்ணி வெடி அகற்ற மட்டும் உலக நாடுகளின் நன்கொடை மூலம் செலவிடப்படுகிறது. இதே நிதி உதவி நீடித்தால், மொத்த கண்ணி வெடிகளையும் அகற்றி முடிக்க 15 முதல் 20 வருடம் ஆகும் என்கிறார்கள். அதுவரை அந்த நிலங்களில் விவசாயம் செய்யமுடியாது.

கம்போடியாவில் கண்ணி வெடி வைத்தவரே கண்ணி வெடிக்கு எதிராக இயக்கம் நடத்தி செயல்பட்டு வருகிறார். அவர் பெயர் அக்கி ரா. ஆறு வயதில் அவர் பெற்றோர் கெமர் ரௌஜ் எனப்படும் இடதுசாரி தீவிரவாதப் போராளி அமைப்பால் கொல்லப்பட்டனர். அவரை அமைப்பே எடுத்து வளர்த்தது. பத்து வயதிலேயே அந்த அமைப்பின் போர்வீரராக்கப் பட்டார் ரே. பின்னர் 16 வயதில் எதிரிகளான வியட்நாம் ராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்டதும், அந்த ராணுவத்தின் படை வீரராக்கப்பட்டார். இப்படி குழந்தை சிப்பாயாக இருந்தது முதல் யுத்தம் முடியும்வரை ரே தானே ஆயிரக்கணக்கான கண்ணி வெடிகளைப் புதைத்திருக்கிறார். தொண்ணூறுகளின் இறுதியில் யுத்தம் ஓய்ந்ததும், ரே கண்ணி வெடிகளுக்கு எதிரானவராகவும் யுத்த எதிர்ப்பாளராகவும் மாறி இதுவரை 50 ஆயிரம் கண்ணி வெடிகளைத் தானே அகற்றியிருக்கிறார்.

தானே எந்த நவீன உபகரணமும் இல்லாமல், வெறும் குச்சிகளை வைத்துக் கொண்டு வெடி இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அகற்றும் திறமையுடையவர் ரே. உலகம் முழுவதும் கண்ணி வெடி அகற்றலில் ஈடுபடும் அமைப்புகள் அவருக்கு இதற்கான நவீனப் பயிற்சி கொடுத்து தொடர்ந்து அவரைப் பயன்படுத்துகின்றன. ரேவை சி.என்.என். டிவி 2010இன் தலை சிறந்த மனிதராக அறிவித்தது. அவர் வாழ்க்கை இப்போது ஒரு படமாக்கப்பட்டுவருகிறது.

அக்கி ரே கண்ணி வெடி ஆபத்து பற்றி விளக்குவதற்கென்றே ஒரு தனி மியூசியத்தை சியாம் ரீப் நகரில் வைத்துள்ளார். அங்கே சென்று சுற்றிப் பார்த்தேன். அதில் சொல்லும் தகவல்கள் எல்லாம் பெரும் கவலை அளிக்கின்றன.

உலகம் முழுவதும் கண்ணி வெடிகளை இனி வைக்கக்கூடாது, முழுக்க நீக்கிவிடவேண்டும் என்று ஐ.நா மூலம் கனடா ஓட்டாவா நகரில் ஒப்பந்தம் 1997இல் போடப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டு 167 நாடுகள் கையெழுத்திட்டன. இவை தம்மிடம் உள்ள கண்ணி வெடிகளை எல்லாம் அழித்துவிட ஒப்புக் கொண்டன. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பல்வேறு ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, இன்னும் பல சிறு நாடுகள் இவை.

கையெழுத்துப் போட மறுக்கும் நாடுகள் பட்டியல்: அமெரிக்கா, சீனா, ரஷ்யா, கியூபா, இஸ்ரேல், ஐக்கிய அரபு நாடு, பாகிஸ்தான்... இந்தியா! இன்னும் கண்ணி வெடிகள் தயாரித்து விற்கும் மிகச் சில நாடுகளில் ஒன்று இந்தியா! இந்தியன் என்பதற்காக நான் வெட்கப்படும் விஷயங்களின் பட்டியலில் இதுவும் ஒன்று.

கம்போடியாவிலிருந்து திரும்பும் வழியெல்லாம் என் மனம் இலங்கையைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது. அக்கிரே போல அங்கிருந்து யாரேனும் வெளிப்பட்டு வருவார்களா? யாழ்ப்பாணமும், கிழக்கும், வன்னியும் இன்னமும் கண்ணி வெடிகளால் நிரம்பியிருக்கின்றன. குறிப்பாக வன்னியின் செழுமையான வயல்களில் வேளாண்மை செய்யவே முடியாதபடி அவற்றில் நாற்றுக்குப் பதிலாக கண்ணி வெடிகளை விடுதலைப் புலிகளும் சிங்கள ராணுவமும் விதைத்து வைத்திருக்கிறார்கள்.

மண்ணில் விழுந்தால் மறுபடி விதையாக முளைப்போம் என்பது கண்ணி வெடிக்குப் பொருந்தாது. மண்ணில் நடப்போரை சவமாக ஆக்கும் விதை அது. மொத்தம் 640 கிராமங்கள் கண்ணிவெடிகளால் வீணாக்கப்பட்டுக் கிடக்கின்றன. முப்பது வருடங்களில் கண்ணி வெடிகளால் மட்டும் சுமார் 20 ஆயிரம் சிங்கள ராணுவத்தினரும், 12 ஆயிரம் விடுதலைப்புலிகளும் பாதிக்கப்பட்டதாக ஒரு கணக்கு சொல்கிறது. கடந்த 4 வருடங்களில் மட்டும் சுமார் 900 கோடி இலங்கைப் பணம் (சுமார் 400 கோடி இந்திய ரூபாய்) கண்ணி வெடி அகற்ற செலவிடப்பட்டிருக்கிறது என்கிறார்கள். இன்னும் சுமார் 200 சதுர கிலோமீட்டர் பகுதிதான் பாக்கி என்றும் 90 சதவிகித கண்ணி வெடிகளை அகற்றியாகிவிட்டது என்றும் அரசு சொல்வது நம்பத் தகுந்ததாக இல்லை என்று தொண்டு நிறுவனங்கள் சொல்கின்றன. சரியான கணக்குகள் எதற்கும் கிடையாது. தமிழர் பகுதிகளில் இன்னும் ஏராளமான நிலங்களில் விவசாயம் செய்ய முடியாமலே இருக்கிறது என்கிறார்கள்.

கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் தமிழர் விதவைப் பெண்கள் அதிகமாக ஈடுபடுகிறார்கள். மாதக் கூலி 200 டாலர் (சுமார் 25000 இலங்கை ரூபாய் அல்லது 12500 இந்திய ரூபாய்). இந்த வேலையும் இல்லாவிட்டால், இந்தப் பெண்கள் இன்னும் கோரமான வறுமையில் துயர்ப்படுவார்கள். முதலில் இயந்திரம் மேல் மண்ணை அகற்றும். பின்னர் மூன்றடிக்கு மூன்றடி சதுரத்தில் பெண் கூலிகள் ஆறு அங்குல ஆழம் வரை தோண்ட வேண்டும். கண்ணி வெடியின் தலை தெரிந்ததும், தோண்டுவதை நிறுத்தி ராணுவ வீரரிடம் சொன்னால் அவர்கள் அடுத்து வந்து அதை அகற்றுவார்கள்.

கம்போடியா பற்றி அறியும் எவரும் இலங்கைத் தமிழர்களை மறுபடியும் ஆயுதம் எடுத்து யுத்தம் நடத்தும்படி ஒருபோதும் தூண்டமாட்டார்கள். அப்படிச் செய்தால் அவர்களுடைய மனித நேயத்தையும் இன உணர்வையும் நான் நிச்சயம் நம்பமாட்டேன். யுத்தம் எதற்கும் தீர்வல்ல. அது தீர்த்துக் கட்டுவது மனிதர்களின் வாழ்க்கையை மட்டும்தான்.

இடிந்த அங்கோர் வாட் கோவில்களைத் திரும்பக் கட்டி விடமுடியும். ஆனால் சிதைந்த வாழ்க்கைகளை — அது தமிழரானாலும் சிங்களவரானாலும், கம்போடியரானாலும், வியட்நாமியரானாலும் ஒருபோதும் நம்மால் திருப்பிக் கட்டவே முடியாது.

கல்கி
20.4.2013

நீதிபதிகளுக்கும் ராமதாசுக்கும் இரு கடிதங்கள்

***நீ**தி— அநீதி: இரு கடிதங்கள்*

கடிதம் 1

அன்புள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு

வணக்கம். கூடங்குளம் அணு உலை பாதுகாப்பானது. நாட்டின் வளர்ச்சிக்கு அது தேவை. எனவே அதை மூடச் சொல்ல முடியாது. போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து விட்டு நீதிமன்றத்துக்குத் தகவல் தெரிவித்தால் போதும் என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள்.

இது எதுவும் எங்களுக்குப் புதிதல்ல. ஏற்கனவே நாராயணசாமி என்று ஒருத்தர் இரண்டு வருடங்களாக 15 நாட்களுக்கு ஒரு முறை இதையேதான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டி ருக்கிறார்.

ஆதாரங்கள், ஆவணங்கள் எதையும் காட்டாமல், தேசத்தின் வளர்ச்சிக்கு அணு மின்சாரம் தேவை என்று கருத்து சொல்ல அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவு உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது? இந்தியாவில் அணுமின்சாரத்தின் சுமார் 50 வருட வரலாற்றில் வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு என்பது தம்மாத்தூண்டு என்பதற்கும் ஆனால் அதற்கு ஆன செலவு வெள்ளை யானையை உருவாக்கி பராமரிக்கும் செலவு என் பதற்கும் எண்ணற்ற ஆவணங்களை நாங்கள் மக்கள் முன்பு வைத்தது போல, உங்கள் மன்றம் வைக்கவில்லையே.

அணு உலை பற்றிய மக்கள் அச்சங்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினையை நீதிமன்றம் முன்பு வழக்காகக் கொண்டு வந்த ஆர்வலரைப் பாராட்டியிருக்கிறீர்கள். உலையை மூடவேண்டும் என்ற அவர் கோரிக்கையை ஏன் நிராகரிக்கிறீர்கள் என்று உங்கள் தீர்ப்பில் பதில்களே இல்லையே. பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும்படி சில அரசு அமைப்புகளுக்கு உத்தர விடுகிறீர்கள். யார் அவர்கள்?

இது வரை பாதுகாப்பு ஏற்பாடுகளை சரியாகச் செய்யத் தவறிய வர்கள், சட்ட விதிகளை மீறியவர்கள் என்று வழக்கு போட்டவர் ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டிய அதே அமைப்புகள். எப்போது கேட்டாலும், எல்லாம் சரியாக இருக்கிறது என்ற ஒற்றை பதிலைச் சொல்லிவந்தவர்கள் அவர்கள். எதெல்லாம் தப்பு தப்பாக இருக்கிறது என்று ஆதாரங்களை நாங்கள் சுட்டிக் காட்டினால், அப்போது அது மட்டும் சரியில்லை, சரி செய்துவிடுவோம் என்று எங்களிடமும் நீதிமன்றங்களிடமும் மழுப்பலாக பதில் தருபவர்கள். அவர்களிடமே திரும்பப் பொறுப்பை ஒப்படைக்கும் நீங்கள், அவர்கள் சரியாக செய்கிறார்களா இல்லையா என்று கண்காணிக்க எந்த ஏற்பாட்டையும் செய்யவே இல்லையே? அதைச் செய்யாமலே உலையை இயக்கலாம் என்கிறீர்களே? இது என்ன தீர்ப்பு? இது என்ன நீதி?

சுற்றுச்சூழல் தொடர்பான விதிகளை வரிசையாக அவர்கள் மீறியதை, ஆர்வலர்கள் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டியதும் மீறியதை ஒப்புக் கொண்டு திரும்ப அனுமதி பெறுகிறோம் என்கிறார்கள். வேறு எந்தக் குடிமகனுக்காவது நீதிமன்றம் இந்த சலுகையை வழங்கியதுண்டா? விதியை மீறி சாதாரண கட்டடம் கட்டினால் இடிக்க சொல்லியிருக்கிறதே நீதிமன்றம்? இப்போது எங்கள் மக்களின் பாதுகாப்பை, விதியை மீறியவர், விதி மீறலை அனுமதித்தவர், கண்டுகொள்ளாதவர், அங்கீகரித்தவர் என்று அதே அமைப்புகளிடம் திரும்பவும் ஒப்படைக்கிறீர்களே, இது என்ன நீதி?

அணு உலையின் பாகங்களை வழங்கிய ரஷ்ய கம்பெனி ஊழல் கம்பெனி என்பதை மறுத்துக் கொண்டே இருந்தவர்கள் இப்போது ஒப்புக் கொள்ளுகிறார்கள். பாகங்களை சரிபார்க்கும் வேலையை இப்போது அவர்களிடமே ஒப்படைக்கிறீர்களே? அவர்கள்தானே ஊழல் கம்பெனியிடம் வாங்கியவர்கள்? ஊழலை இதுவரை மறுத்தவர்கள்? வேறு சுயேச்சையான அமைப்பிடம் அல்லவா இந்தப் பொறுப்பை நீங்கள் தரவேண்டும்? திருடியவனிடமே ஸ்டாக் சரிபார்க்க கஜானா சாவியைக் கொடுக்கும் நீதிக்கு எந்த அரசியல் சட்டப்பிரிவு அனுமதி தருகிறது?

நாளை இந்த அணு உலையில் விபத்து நடந்தால், அதற்கு

இனி நீங்களும்தானே பொறுப்பு?

அநீதியான ஒரு தீர்ப்பில், ஆறுதல் போல போராடும் மக்கள் மீது போடப்பட்ட ஆயிரக்கணக்கான கிரிமினல் வழக்குகளைத் திரும்பப் பெறச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறீர்கள். ஒருவேளை வழக்கை ரத்து செய்தால், போராடும் மக்கள் அணு உலை எதிர்ப்பைத் தொடராமல் கைவிட்டுவிடுவார்கள் என்ற நப்பாசையாக இருக்கலாம். அறவழியில் போராடும் எதிர்ப்பாளர்கள் மீது இனிமேலும் வழக்கு போடவேண்டாம் என்று அரசுக்கு நீங்கள் சொல்லியிருந்தால் அதுதான் சரியாக இருந்திருக்கும்.

ஏனென்றால் தொடர்ந்து அணு உலைகளை எதிர்ப்பவர்கள் எதிர்த்துக் கொண்டுதான் இருப்போம். அவை ஆபத்தானவை, பயனற்றவை, வளர்ச்சிக்கு எதிரானவை என்பது நீங்கள் கவனிக்கத் தவறிய ஆவணங்களால் வரலாறுகளால் நாங்கள் உணர்ந்து அறிந்து தெளிந்த உண்மைகள். உங்கள் மன்றங்கள் கோர்ட் ஆஃப் லாதானே ஒழிய கோர்ட் ஆஃப் ஜஸ்ட்டிஸ் அல்ல என்பதை நாங்கள் எப்போதும் அறிவோம்.

ஆங்கிலேய ஆட்சியின் கீழ் அதை எதிர்த்துப் போராடிய மக்கள் எல்லாரும் அன்றைய சட்டப்படி, அவற்றின் கீழ் தண்டனை வழங்கிய நீதிபதிகளின்படி, குற்றவாளிகள்தான். ஆனால் அந்த மக்கள்தான் பின்னால் அதிகாரம் கை மாறியதும், புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கச் செய்தார்கள். இப்போதிருக்கும் சட்டங்கள் எங்களுக்கான நீதிகளுக்குப் போதுமானவை என்று நம்பியே உங்களிடம் வந்தோம். இல்லை, அவை போதாது என்றால், மறுபடியும் மக்கள் திரண்டு சட்டங்களை மாற்றுவோம்; நீதிபதிகளை மாற்றுவோம். நீதியை மாற்றமுடியாது. அது எப்போதும் எங்களுக்கானது.

அன்புடன்

மக்களை நேசிப்பதால்
அணு உலைகளை வெறுக்கும் ஒரு மனிதன்.

கடிதம் 2

அன்புள்ள டாக்டர் ராமதாஸ் அவர்களுக்கு

வணக்கம்.

மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு நாள், என் மீது நீங்கள் வைத்திருந்த மதிப்பினால் என் வீடு தேடி வந்து நீங்கள் என்னு

டன் ஒரே கட்டிலில் அமர்ந்து ஒரு மூத்த உறவினர் போல எந்த தயக்கமும் தடைகளும் இன்றி மூன்று மணி நேரம் உரையாடியது என் மனதில் இன்னமும் பதிந்திருக்கிறது.

விடை பெற்றுப் புறப்படும்போது காரில் ஏறியதுமே நீங்கள் தன்னிச்சையாக பாதுகாப்பு பெல்ட்டை அணிந்ததையும், உங்கள் ஓட்டுநர் முதல் உடன் வந்திருந்த இதர நண்பர்கள் வரை அனைவரும் யாரும் சொல்லாமலே அப்படிச் செய்ததையும் கண்டு நான் வியந்து பாராட்டியது உங்களுக்கும் நினைவில் இருக்கலாம்.

சமூகத்தில் மேம்போக்கான மாற்றங்களைச் செய்யாமல், ஆழமான அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற தொலை நோக்குடன் நீங்கள் சங்கம் தொடங்கிய நாள் முதல் கட்சி வளர்த்த நாள் வரை என்னவெல்லாம் செய்து வந்திருக் கிறீர்கள் என்று கோப்புகள், ஆவணங்கள் உதவியோடு அன்று எனக்கு விளக்கினீர்கள். சினிமாவை சார்ந்திராத சுயேச்சையான தொலைக்காட்சி நடத்துவது, தாய்மொழிக் கல்வி, அரசின் நிதி நிலை அறிக்கைக்கு துறை வாரியாக மாற்று யோசனை அறிக்கைகள், பூரண மதுவிலக்கு என்ற பல கொள்கைகள் எனக்கும் உடன்பாடானவையே என்று நானும் உங்களிடம் சொன்னேன்.

அனைத்தையும் விட வட தமிழகம் முழுவதும் நீங்களும் தொல். திருமாவளவனும் சேர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் வாயிலாகக் கடந்த சுமார் பத்தாண்டுகளாக ஏற்படுத்தியிருக்கும் சாதி சமரச அமைதி உணர்வு மகத்தானது என்பதை நான் உங்களுக்குச் சொன்னேன். ஏனென்றால் வன்னி யர்களை நான் ஆதிக்க சாதியாகக் கருதியதில்லை. தீண்டாமை என்ற ஒற்றை அம்சத்தைத் தவிர வன்னியரும் பறையரும் ஒரே அடித்தள வாழ்நிலையில்தான் வட தமிழகத்தில் வாழ்கிறார்கள் என்பதை அந்த மண்ணின் மைந்தனான நான் நேரடியாக அறிவேன்.

இன்னும் சொல்லப் போனால் இந்த இரு பிரிவினரும் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து செயல்பட்டால், இந்த வட்டாரத்தில் வேறு எந்த அரசியல் சக்தியும் ஆதிக்க சாதியும் தேர்தல் அரசியலில் இவர்களை வீழ்த்தவே முடியாது என்ற உண்மையையும் நாம் விவாதித்தோம்.

ஆனால் நீங்களோ, தாழ்த்தப்பட்ட சாதியினர், குறிப்பாக பறையர், தம் கட்சி ஆதரவுடன் சாதி மறுப்பு என்ற பெயரால், கலப்புத் திருமணம் என்ற பெயரால் காதல் நாடகங்கள் நடத்தி மிரட்டிப் பணம் பறிப்பதை எதிர்க்கவே ஓர் உயர்

சாதிக் கூட்டமைப்பை ஏற்படுத்தியதாக எனக்குப் புரியவைக்க முயற்சித்தீர்கள்.

விடலைக் காதலை நானும் ஆதரிக்கவில்லை. காதல் நாடகங் களை நானும் ஆதரிக்கவில்லை. மிரட்டிப் பணம் வசூலிக்கும் கட்டப் பஞ்சாயத்தை நானும் ஆதரிக்கவில்லை. மனித நேயமும் சமத்துவமும் விரும்பும் எவரும் ஆதரிப்பதில்லை. ஆனால் நீங்கள் காண மறுக்கிற முக்கியமான உண்மை என்னவென்றால் இந்த அட்டூழியங்கள் எல்லாம் ஏதோ ஒரு சாதியினர் மட்டும் செய் பவை அல்ல. இப்படி செய்வோர் எல்லா சாதிகளிலும் எல்லா கட்சிகளிலும் — உங்கள் கட்சி உட்பட — இருக்கிறார்கள். அவர் கள் எல்லாரையும் நம் சமூகம் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதுதான் தீர்வே தவிர, பழியை ஒற்றை சாதி மீது மட்டும் போட்டு இதர சாதிகளை ஓரணி திரட்டும் உங்கள் முயற்சி தவறானது என்பதை உங்களிடம் சொன்னேன்.

இந்த தவறின் விளைவாக என்ன ஆயிற்று? சாதி சங்கத்தலைவர் என்ற குறுகிய வட்டத்திலிருந்து எல்லாருக்குமான பொதுவான அரசியல் தலைவர் என்ற பிம்பத்தைப் பெறத்தொடங்கிய நீங்கள் மறுபடியும் புறப்பட்ட இடத்துக்கே போய் சேர்ந்துவிட்டீர்கள். எப்படிப்பட்ட வீழ்ச்சி இது உங்களுக்கு! பொது மேடையிலும் தனிப் பேச்சிலும் கண்ணியமாகவும் கறாராகவும் பேசுபவர் என்ற பிம்பம் நொறுங்கி, மாமல்லபுர மேடையில் உங்கள் சகா காடுவெட்டி குருவே வெட்கப்படும் அளவுக்கல்லவா உங்கள் பேச்சு தரம் தாழ்ந்துபோயிற்று!

ஒரு கட்டாய ஓய்வை சட்டமும் அரசும் உங்களுக்குக் கொடுத் திருக்கின்றன. சிறைச்சாலையின் நோக்கம் தண்டிப்பதல்ல, திருத்துவது என்றே பண்பாளர்கள் எப்போதும் சொல்லி வந்துள் ளனர். இந்த ஓய்வு உங்களை நீங்களே திருத்திக் கொள்வதற்கான நல்வாய்ப்பாக அமையட்டும்.

திராவிடக் கட்சிகளின் ஊழல் முகத்துக்கு முன்னால் இருக்கும் முற்போக்கு சாயம் முற்றிலுமாக வெளுக்கும் வரை கூட இருந்து உங்களை வளர்த்துக் கொண்ட நீங்கள், இனி அவற்றுடன் கூட்டு இல்லை என்று அறிவித்தபின் செய்திருக்க வேண்டியது என்ன? அவற்றை விட முற்போக்கான அமைப்புகளுடன் அல்லவா அணி சேர்ந்து தமிழகத்தில் புதிய அரசியல் பார்வை தழைக்க முயற்சித்திருக்க வேண்டும்? நீங்களோ, திராவிடக் கட்சிகளை விட பிற்போக்கான சாதி அமைப்புகளை ஒன்றிணைத்து அதன் உடனடிப் பயனாக, சிறையில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

இந்த நேரத்தில் யோசியுங்கள். ஏன் உங்கள் அரசியல் இப்படி வீணாயிற்று? நீங்கள் அரசியலில் நுழைந்த நாட்களிலேயே

என்னைப் போல மிகச் சிலர் உங்களுடைய ரோல் மாடலே சரியில்லை என்றே கருதினோம். உங்களுக்கு ஒரு ரோல் மாடல் கலைஞர் கருணாநிதி. மற்றவர் செல்வி ஜெயலலிதா. இரண்டாம வரை அரசியலில் ரோல் மாடலாக எடுத்துக் கொள்ளவே இயலாது. ஒரு எம்ஜிஆர் இல்லையென்றால் அவர் இல்லை. எம்ஜிஆர் போன்ற செல்வாக்குடையவர் ஆசி இல்லாமல் வந்த நீங்கள் பின்பற்றியது கருணாநிதியின் ரோல் மாடலைத்தான். அவர் ஆசி வழங்க அண்ணா இல்லையென்றாலும் அரசியலில் மேலே வந்திருக்கக்கூடிய ஆற்றல் உடையவர்.

கலைஞரிடமிருந்து எங்கும் தமிழ், சாதிய எதிர்ப்பு, சமூக நீதி என்ற கோஷங்களையெல்லாம் எடுத்துக் கொண்ட நீங்கள் அத்துடன் நிறுத்தியிருக்க வேண்டும். அவருடைய குடும்பப் பாசம், சுயநல அரசியல், வாரிசு ஊக்குவிப்பு, ஊழல், அராஜகம் என்ற அத்தனை எதிர்மறை அம்சங்களையும் எடுத்துக் கொண்டீர்கள். அவரை இன்று வீழ்த்திய அதே அம்சங்கள் உங்களையும் வீழ்த்திவிட்டன.

கலைஞருக்கும் ஜெயலலிதாவுக்கும் இல்லாத ஒரு பலம் — ஒரு பெரும் சாதியின் பிரதிநிதி என்ற பலத்தை — உங்களுக்கு எதிரான பலவீனமாக இன்று ஆக்கிக் கொண்டீர்கள். வாரிசு அரசியலால் உங்களுக்கு எந்தப் பயனுமில்லை. ஸ்டாலின் கலைஞருக்கு உதவும் அளவு கூட அன்புமணியால் உங்களுக்கு அரசியல் பயனில்லை. அவருக்குத்தான் உங்களால் லாபம். கடைசியில் நீங்கள் காடுவெட்டி குருவைத்தானே நம்புபவராக ஆகிவிட்டீர்கள்!

உங்களுடைய இன்றைய சாதி அரசியல் வரப் போகும் தேர்தலில் உங்களுக்குத் துளியும் உதவப் போவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அந்நியர் ஓட்டு வன்னியர்க்கில்லை என்று ஆக்கிவிட்டீர்கள். நீங்கள் தேர்தலில் ஜெயிக்காமல் போனால் நாட்டுக்கு எந்த இழப்புமில்லை. ஆனால் உங்கள் சாதி அரசியல் உங்கள் சாதியினருக்கே எதிரானது. மாமல்லபுரத்தில் நீங்கள் சாதி வெறியைத் தூண்டியதால் தலித்துகள் மட்டும் பாதிக்கப்படவில்லை. உங்கள் சாதியினர் இருவரும் செத்தார்கள். அடித்தட்டில் இருக்கும் இரு சாதியினர் கைகளில் எழுதுகோல் ஆயுதத்தைக் கொடுக்க வேண்டிய மருத்துவர் நீங்கள். மனிதக் கறி வெட்ட, கத்தியைக் கொடுக்கும் கசாப்பு கடைக்காரராகி விட்டீர்கள்.

சிறையில் இதையெல்லாம் பொறுமையாக சிந்தியுங்கள். நீங்கள் அறிவும் சிந்திக்கும் திறனும் உடைய 73 வயது மூத்த குடிமகன். நீங்களும் உங்களோடு சிறை புகுந்தோரும் இருக்க வேண்டிய இடம் சிறையல்ல. பல்கலைக்கழகம். வெளியே

வரும்போது தவறைத் திருத்திக் கொள்ளுங்கள். சாதியக் கூட்டமைப்பைக் கலைத்துவிட்டு ஆரோக்கியமான மாற்று அரசியலை முன்வையுங்கள். உங்கள் ரோல் மாடலாக காந்தியையும் மண்டேலாவையும் அம்பேத்கரையும் எண்ணிப் பாருங்கள். காடுவெட்டி குருக்களுடன் எதிர்கால வாழ்க்கையை செலவிடுபவராக உங்களை நீங்கள், மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது ஒரு முறையேனும் நினைத்துப் பார்த்திருப்பீர்களா என்று யோசியுங்கள்.

தவறுகளை ஒப்புக் கொள்ளாமல் நடிப்போருக்கே தமிழக மக்கள் மறுபடியும் மறுபடியும் திருந்த வாய்ப்பு தருபவர்கள். நிஜமாகவே திருத்திக் கொள்வோருக்கு ஆலயமே எழுப்புவார்கள்.

மனமாற்றத்துடன் வெளியே வருவதாகத் தகவல் அனுப்புங்கள். சிறை வாயிலில் தொல்.திருமாவளவனுடன் வந்து மாலை அணிவித்து உங்களை வரவேற்கக் காத்திருப்பேன். நான் மட்டுமல்ல இன்னும் பலர். மாற மறுத்துப் பிடிவாதமாக இருப்பீர்களானால், மன்னியுங்கள், மலர் வளையம் வைக்க வேண்டிய நாளில் கூட ஒருவரும் வரமாட்டோம்.

அன்புடன்
ஞாநி

கல்கி
18.5.2013
(இதழில் சுருக்கமாக வெளியானது)

அத்வானி x மோடி முகமூடிகளின் கதை

ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தி கோவிந்தாச்சாரியா பல வருடங்கள் முன்னர் வாஜ்பாயியை பி.ஜே.பியின் முகமூடி என்று வர்ணித்தார். பின்னர் தான் அப்படிச் சொல்லவில்லை என்று அவர் மறுக்க வும் செய்தார். அவர் சொல்லியிருந்தாலும் சொல்லியே இரா விட்டாலும், வாஜ்பாயி பி.ஜே.பிக்கு வாய்த்த அருமையான முகமூடி என்பதில் சந்தேகமில்லை.

பி.ஜே.பி அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கட்டுப் பாட்டில், ஆர்.எஸ். எஸ்சின் லட்சியங்களை நிறைவேற்றும் நோக்கத்துடன் இயங்கும் அரசியல் கட்சி என்பது யார் மறுத்தாலும் மறைக்க முடியாத உண்மையாகும். இந்துத்துவா என்பது மதவாதம் அல்ல என்றும் தாங்கள் வலியுறுத்துவது பண்பாட்டைத்தான் என்றும் பி.ஜே.பி எவ்வளவு குரலெழுப்பினாலும், அவையெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.சின் இதர மத எதிர்ப்பு/வெறுப்புக்கான அரசியல் தத்துவ வடிவம்தான் என்பது நடைமுறையில் அயோத்தி முதல் குஜராத் வரை அம்பலமாகிவிட்டது.

இந்தியாவில் பி.ஜே.பி தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் சிறுபான்மை மதத்தினருக்கு எதிராகக் குரல் எழுப்புவதையே ஒரு கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்தியாவின் பெருவாரியான மக்கள் இந்த பிற மத விரோத உணர்ச்சியைத் தங்கள் வாழ்க்கை முறையாக ஏற்கவே இல்லை. அதனால்தான் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே தோற்று விக்கப்பட்டபோதும், வெவ்வேறு அவதாரங்களில் மக்கள் முன்னால் வந்து நின்றபோதும் ஆர்.எஸ்.எஸ்சின் அரசியல்

வடிவத்தால் சுமார் ஐம்பது ஆண்டுகளாகியும் தொண்ணூறுகள் வரை இந்திய ஆட்சி அதிகாரத்தை முற்றாக வசப்படுத்த முடிய வில்லை.

அதற்குப் பயன்படுத்திய பல உத்திகளில் ஒன்றுதான் முகமூடி உத்தி. நெருக்கடி நிலையின்போது ஜனநாயகக் காவலர்கள் என்ற முகமூடியைப் பயன்படுத்தியது ஆர்.எஸ்.எஸ். அதன் அரசியல் வடிவமான ஜனசங்கம் கட்சி எமர்ஜென்சியை எதிர்ப்பதாக காட்டிக் கொண்டு, காங்கிரசுக்குள்ளேயிருந்து இந்திராவை எதிர்த்து வெளியே வந்த மொரார்ஜி போன்ற மதவாதம் இல்லாத தலைவர்களின் அணிகளுடனும், மதவாத எதிர்ப்பாளர்களான சோஷலிஸ்ட் அணிகளுடனும் ஒன்று சேர்ந்து அவர்களைப் பயன்படுத்திக் கொண்டது. எல்லாமாக ஜனதா கட்சி என்ற வடிவத்தில் இயங்கினார்கள். இதில் லாபம் அடைந்தது ஜனசங்கம் எனப்பட்ட ஆர்.எஸ்.எஸ் மட்டும்தான். வாஜ்பாயி, அத்வானி போன்ற தீவிர ஆர்.எஸ்.எஸ்காரர்கள் முக்கிய அமைச்சரானார்கள். அரசாங்கத்துக்குள்ளேயும் மீடியா உலகிலும் அப்போது ஏராளமான ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள்/அனுதாபிகள் ஊடுருவினார்கள். இன்று அரசிலும் பல ஊடகங்களிலும் முன்னணியில் இருந்தபடி பி.ஜே.பி சார்பு நிலையை ஊக்குவிக்கும் வலிமையான இடத்தை அடைந்த பலர் அப்போது கீழ் மட்டங்களில் ஊடுருவியவர்கள்தான்.

ஜனதா ஆட்சி சில வருடங்களிலேயே உடையக் காரணம் இந்திராவின் அரசியல் சூழ்ச்சிகள் என்று பொதுவாகக் கருதப் படுகிறது. அவை அசல் காரணங்கள் அல்ல. ஜனதா கட்சிக் குள்ளும் ஆட்சிக்குள்ளும் அப்போது இருந்த ஆர்.எஸ்.எஸ் ஆதரவு/எதிர்ப்பு சக்திகளின் முரண்பாடுகளினால்தான் ஜனதா ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

இதில் விசித்திரம் என்னவென்றால் இந்திராவின் சர்வாதி காரத்தை ஆர்.எஸ்.எஸ்சின் அரசியல்வடிவமான ஜனசங்கமும் ஜனதாவும் எதிர்த்தபோதே, ஆர்.எஸ்.எஸ் பகிரங்கமாக இந்திராவை ஆதரித்தே அறிக்கை வெளியிட்டு இரட்டை வேடம் போட்டது. முகம் ஒன்றும் முகமூடி ஒன்றும் பேசுவதுதான் தொடர்ந்து பின்பற்றப்படும் உத்தி.

எமெர்ஜென்சியின்போது பல அராஜகங்களுக்குக் காரணமான வரான சஞ்சய்காந்திக்கு நெருக்கமாக இருந்து டெல்லி கவர்னராக முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகளை செய்த ஜக்மோகன் பின்னாளில் பி.ஜே.பி அமைச்சரானார். சஞ்சய் காந்தியின் குடும்பம் முழுவதும் பி.ஜே.பியில்தான் இருக்கிறது.

தொண்ணூறுகளில் ஆர்.எஸ்.எஸ் முகமூடி உத்தியை அபார

மாகப் பின்பற்றியது. அத்வானி பகிரங்கமாக ரத யாத்திரைகள் நடத்தி அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து ராமர் கோவில் கட்டவேண்டுமென்ற இயக்கத்தை நடத்தி, இந்து மத சார்பாளர் ஓட்டுகளையெல்லாம் திரட்டுவது, வாஜ்பாயியோ அத்வானி போன்ற தீவிரமத வெறியர் இல்லை என்று காட்டும் செக்குலர் முகமூடி அணிந்து மதவாதத்தில் நம்பிக்கையற்றவர்களின் காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளைத் திரட்டுவது என்று இருமுனைத் தாக்குதலைத் தொடங்கியது ஆர்.எஸ்.எஸ். ஒருத்தர் மூலவர். இன்னொருத்தர் உற்சவர் என்ற இந்த உத்தி சிறப்பாக வேலை செய்தது.

ஆனால் இப்போது இந்த இரட்டைக் குழல் துப்பாக்கி வேலை சாத்தியமில்லாமல் போய்விட்டது. இந்தப் பின்னணியில்தான் அத்வானி— மோடி 'மோதல்' என்பது என்ன என்று புரிந்து கொள்ள வேண்டும்.

அத்வானியை விட சுமார் 20 வயது இளையவர் நரேந்திர மோடி. காங்கிரசில் அடுத்த தலைமைக்கான முகமாக 40 வயது ராகுல் காந்தி முன்னிறுத்தப்படும் சூழலில், பிஜேபி(ஆர்.எஸ்.எஸ்), தன்னிடம் இருக்கும் இளம் முகமான மோடியை முன் நிறுத்தவேண்டிய தேவையில் இருக்கிறது.

மோடி இந்துத்துவாவைப் பொறுத்த மட்டில் அத்வானி வழியைச் சேர்ந்தவர். ராமர் கோவில் ரத யாத்திரைகள் மூலம் பகிரங்கமாக இந்துத்துவ நிலையை அத்வானி எடுத்ததைப் போலவே, கோத்ராவையடுத்து குஜராத்தில் முஸ்லிம்களுக் கெதிரான தாக்குதல் கொலைகளுக்குத் தன் அரசாங்க ஆதரவை அளித்த செயல்வீரர்தான் மோடி.

அத்வானி இடத்துக்கு மோடி இருக்கிறார். ஆனால் வாஜ்பாயி இடத்துக்கு? இதுதான் இன்றைய பிஜேபி/ஆர்.எஸ்.எஸ்சின் சிக்கல். பிஜேபியின் உச்சமான தலைமைப் பொறுப்புக்கோ, அல்லது பிரதமர் பொறுப்புக்கோ ஆர்.எஸ்.எஸ் தொண்டரல்லாத வேறு எவரையும் ஒருபோதும் கொண்டு வர மாட்டார்கள். அதனால் தான் ஜஸ்வந்த் சிங், யஷ்வந்த் சின்ஹா போன்ற ஆர்.எஸ்.எஸ் பின்னணி இல்லாத மூத்த தலைவர்கள் யாரும் உச்ச இடங்களுக்கு ஒருபோதும் செல்லவே முடியாது. இப்போது வாஜ்பாயிக்கு நிகராக முன் நிறுத்தி முகமூடி மாட்ட ஆர்.எஸ்.எஸ் பின்னணி உள்ள எந்த முகமும் இல்லை.

எனவே மோடிக்கே வாஜ்பாயி முகமூடியையும் அணிவிப்பது என்று முடிவு செய்தார்கள். கடந்த ஐந்து வருடமாக குஜராத் தின் வளர்ச்சிக்கான சிற்பி என்று ஒரு புது முகமூடியை உருவாக்கினார்கள். ஆனால் மூலவரே உற்சவராக ஊர்வலம்

போவது ஒத்து வரவில்லை. ஒருவரையே இரு மாறுபட்ட முகங்களுடன் மக்கள் முன்னால் அனைத்திந்திய அளவில் விற்பது கடினமாக இருக்கிறது. ஏற்கனவே கோவிந்தாச்சாரியா சுட்டிக் காட்டியிருப்பதை இங்கே நினைவு கூரலாம். அத்வானிதான் பிரதமர் பொறுப்புக்கு ஏற்றவர். நரேந்திர மோடி மத்திய உள்துறை அமைச்சர் பதவியை வகித்து முதலில் அனுபவம் பெற வேண்டும் என்று கோவிந்தாச்சாரியா சில வருடம் முன்பே சொன்னார்.

இந்தப் பின்னணியில்தான் இப்போது அத்வானி, தானே வாஜ்பாயி ஆகமுடியுமா என்று சின்ன முயற்சி செய்து பார்த்திருக் கிறார். பிரதமர் பதவிக் கனவை 15 வருடம் முன்பே இயக்க நலனுக்காகத் தியாகம் செய்தவர் அவர். இப்போதுதான் கடைசி வாய்ப்பு. மோடி தன் ரோலிலும் தான் வாஜ்பாயி ரோலிலும் நடித்தால் பழைய படத்தின் ரீமேக்கும் அதைப் போலவே வெற்றி பெற்றுவிடும் என்று அத்வானி கணக்கு போட்டிருக்கக்கூடும்.

ஆனால் நாகபுரியில் இருக்கும் இயக்குநர்கள் திரைக்கதையை குணச்சித்திர நடிகர் தீர்மானிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இனிமேல் உங்களுக்கு நம்ம படத்துல கெஸ்ட் ரோல்தான் என்று அடித்துச் சொல்லிவிட்டார்கள்.

மோடியை தேர்தல் குழுப் பொறுப்பாளராக்கிய அதிருப்தியில், அத்வானி கட்சியின் பல பொறுப்புகளிலிருந்து தான் விலகுவதாக எழுதி இப்போது திரும்பப் பெற்றுவிட்ட கடிதத்தில் சொல்லி யிருக்கும் முக்கியமான விஷயம் என்ன ஆயிற்று? அறுபது வருடங்களுக்கும் மேலாக தான் இருந்து வரும் கட்சி தன் லட்சி யங்களிலிருந்து விலகிப் போவது, அதன் இன்றைய தலைவர்கள் பலர் சுயநலமிகளாகிவிட்டது என்றெல்லாம் அத்வானி சொன்ன குறைகள் சும்மா ஒரு சாக்குதான். (இதையே கோவிந்தாச்சாரியா பல வருடம் முன்பே சொல்லிவிட்டுப் போய்விட்டார்.) ஏனென்றால் இந்தக் கோளாறுகளின் உச்சமாக கர்நாடகத்தில் எடியூரப்பா ஆட்சி நடந்தபோது அத்வானி இப்படியெல்லாம் கொந்தளிக்கவே இல்லை.

இப்போது அவரது தலைமை 'வாயை மூடிக்கொண்டு சும்மா கிட' என்று சொன்னதும் விஸ்வாசமான காக்கி நிஜார் தொண்டராக ராஜினாமா கடிதத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார். எந்த அளவு இயக்க விஸ்வாசம் என்றால் அவர் வீட்டிலேயே இந்த அறிவிப்பைக் கட்சித் தலைவர் செய்கிறார். பக்கத்தில் வந்து மௌனமாக உட்காரக் கூட அவர் வரவில்லை. என்ன சொல்லி அத்வானியை சமாதானப்படுத்தியிருக்க முடியும்? "இனி பிரதமர் பதவியெல்லாம் உங்கள் தகுதிக்குக் குறைவானது. மோடி பிரதமராகட்டும். அடுத்த ஜனாதிபதியாக

உங்களை ஆக்கிவிடுவோம்" என்று சொல்லியிருப்பார்களோ? இருக்கலாம்.

இந்த சுற்றில் அத்வானி தோற்பார் என்பது தெரிந்த விஷயம் தான். காரணங்கள் பல. ஆர்.எஸ்.எஸ்சுக்கும் பி.ஜே.பிக்கும் அடுத்த 20 வருடங்களுக்குத் தங்கள் காயை நகர்த்தப் பொருத்தமான வயதில் அத்வானி இல்லை. அதற்கு மோடிதான் சரி. அத்வானி கட்சிக்குள் பலவீனமாகிவிட்ட சுதேசி பொருளாதாரக் கொள்கை யின் ஆதரவாளர். ஆனால் இப்போது கட்சி மன்மோகனுக்கு போட்டியாக பன்னாட்டு முதலீடு தாராள பொருளாதார சார்பை நோக்கிச் செல்லும் மோடியையே விரும்புகிறது.

வாஜ்பாயியின் 'செக்குலர்' முகமூடி அப்போது பல அறிவுஜீவி களைக் கட்சிக்கு ஈர்த்தது போல இப்போது ஈர்க்கமுடியாது. 'வலதுசாரி ஃப்ரீ மார்க்கெட் கொள்கை'தான் ஈர்க்கும். அதற்கு மோடியின் குஜராத் டெவலப்மெண்ட் முகமூடிதான் சரி என்றே நாகபுரி கணக்கு போட்டிருக்கக்கூடும்.

இந்த முகமூடி மாற்ற நாடகம்தான் இப்போது நடந்திருக்கிறது. முகமூடிகளை ஒப்பனை அறைக்குள் மாற்றிவிட்டு பிறகு அரங்கில் வந்து ஆட்டம் ஆடுவது மரபு. ரகசியமாக செய்யும் ஒப்பனையை பகிரங்கமாக செய்ததில் கொஞ்சம் சிக்கலாகிவிட்டது. அவ்வளவு தான். நாங்கள் ஆட்சி அமைத்தால் அடுத்த குடியரசுத் தலைவர் அத்வானிதான் என்ற வசனங்களை வரப் போகும் நாட்களில் விரைவில் கேட்போம். மோடியே அதை அறிவித்தாலும் ஆச்சரியப்படவேண்டாம்.

இந்த வார கவன ஈர்ப்பு செய்தி:

இந்தியாவிலேயே மிக அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கும் மாநிலங்களில் நான்காவது இடம்: குஜராத்துக்கு! மொத்தம் 3.9 லட்சம் குழந்தை தொழிலாளர்கள். முதல்நிலை: உத்தரகண்ட் - 17.5 லட்சம். இரண்டாவது: மேற்கு வங்கம் - 5.5 லட்சம். மூன்றாவது: ராஜஸ்தான் - 4.05 லட்சம்.

கல்கி
22.6.2013
(கட்டுரை எழுதிய நாள்: 12.6.2013)